(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 41.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2010, ஒற்றோபர் 19, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0334/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது செயற்படும் மாகாண சபைகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு மாகாண சபையினதும் வருடமொன்றிற்கான மொத்தச்செலவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாகாண சபைக்கும் தெரிவு செய்யப்பட்டு, ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சியைப் பிரதிநிதிப்படுத்தப்படுவதும் தற்போதைய உறுப்பினர்களின் பெயர்கள், பிறந்த திகதிகள் மற்றும் அவர்களது அரசியற் கட்சிகள் ஆகியவற்றையும்,

(ii) மாகாண சபை உறுப்பினரொருவருக்கு உரித்தான நன்மைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0407/ '10

2.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் இரக்வானை தேர்தல் தொகுதியின் கொடகவெல நகரத்தில் தேசிய நீர் வழங்கல் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அதன்மூலம் நீர் வழங்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதன் மூலம் குடிநீர் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவை என்பதையும்,

(iv) மேற்படி நீர் வழங்கள் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(v) மேற்படி நீர் வழங்கள் திட்டம் முடிவுறுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0441/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் படையினருக்கும் தற்போது, ஓய்வூதியத்தில் 65% வழங்கப்படுகின்றதென்பதையும்,

(ii) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இத்தொகை 85% வரை உயர்த்தப்பட வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டிய மேற்படி ஓய்வூதிய உயர்வு இற்றைவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், இது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0542/ '10

4.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினம் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு வைத்தியாசலைக்குச் சொந்தமான நோயாளர் வண்டி இனம் தெரியாதோரால் தீ வைத்து அழிக்கப்பட்டது என்பதையும்,

(ii) இதனால் மேற்படி வைத்தியசாலையின் கடுமையான நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரை அவசர சிகிச்சைகளுக்காக வேறொரு வைத்தியசாலைக்கு கொண்டு போவதில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) காரைதீவு வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியொன்றினை வழங்குவதில் உள்ள தேவைப்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும், இதுவரை மேற்படி வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், மேற்படி வைத்தியசாலைக்கு தாமதமின்றி நோயாளர் வண்டி ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0559/ '10

5.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0560/ ‘10

6.

கௌரவ (அல்ஹர்ஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் சில்லறை களஞ்சியங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் மேற்படி நிறுவனத்திற்குப் பொறுப்பாக செயலாற்றிய அமைச்சர் யாரென்பதையும்,

(ii) மேற்படி அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதிக்கான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பதவிகளை வகித்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் முகவரிகள், பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சர் பதவி வகித்த காலகட்டத்தில் இவரது பணியாட்டொகுதிக்கு மேற்படி அமைச்சிலிருந்து, அரசாங்க கூட்டுத்தபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து, கூ. மொ. வி. நி. போன்ற இணைந்த கம்பனிகளிலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர்கள், முகவரிகள், வகித்த பதவிகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், பெற்ற ஏனைய சலுகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் அமைச்சின் பணியாட்டொகுதிக்கு இணைக்கப் படுவதற்கு முன்னர் சேவையாற்றிய நிறுவனங்கள் மற்றும் வகித்த பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல் ஏன்?

0603/ ‘10

7.

கௌரவ அருந்திக பெர்னாந்து,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ,

(i) கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) கொழும்புத் துறைமுகத்தில் வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட பண்டக் கொள்கலன்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) கொழும்புத் துறைமுகம் ஈட்டிய மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்வரும் ஆண்டுகளில் கொழும்புத் துறைமுகத்தின் வருவாயை விருத்தி செய்வதற்கான உத்தேச வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0604/ ‘10

8.

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலுமுள்ள பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு பால் உற்பத்தி எத்தனை மில்லியன் லீற்றர்கள் என்பதையும்,

(iii) இப்பால் உற்பத்தி குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் தேசிய பால் தேவைக்கு வெவ்வேறாக எத்தனை வீதத்தில் பங்களிப்புச் செய்தள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாற் பண்ணையாளர்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) பால் கைத்தொழிலின் பயனுறுதியை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) பெருந்தோட்டத்துறையில் பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379/ ’10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆளணியினர் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு ஆளணியினர் ஆகியோரது எண்ணிக்கை என்னவென்பதை தனித்தனியாகவும்,

(ii) அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் வேறுயாருக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளர் என்பதையும்,

(iii) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அமைச்சுப் பாதுகாப்புப் பிரவினரின் பட்டியலொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்று வரை பொலிஸ் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்ற தோல்வியடைந்த அபேட்சகர்கள், தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களையும்,

(ii) அவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் எங்கிருந்து பெறப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்விதமான வேலைக்கமர்த்தலின் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ், நீதித்துறைப் பாதுகாப்புப் பிரிவு, அல்லது அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு ஆளணியினரின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0412/ '10

10.

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 சீ, தொகுதியில் அமைந்துள்ள 2,227 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 03, ஆர். ஏ. டி மெல் மாவத்தை 345 ஆம் இலக்க முகவரியிலுள்ள குலோபல் தே பேக்ஸ் கம்பனிக்கு ரூபா 30,065.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குத்தகையாளர் சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல், மேற்படி களஞ்சிய சாலையை மீண்டும் ம.தோ.அ.சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0442/ '10

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் (Poseidon Leader) பொசீடன் லீடர் கப்பலின் மூலம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இக் கப்பல் சொந்தமாயுள்ள கம்பனியின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கப்பலின் மூலம் கொண்டுவரப்பட்ட வாகன வகைகளின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்,

(ii) இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டவையா (Recondition) அல்லது பயன்படுத்தப்படாத புதிய (Brand new) வாகனங்களா என்பதையும்,

(iii) ஒவ்வொரு வாகனத்தினதும் பெறுமதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) மேற்படி வாகனங்கள் கப்பலில் ஏற்றப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(ii) அவை எக்கம்பனிகளுக்குச் சொந்தமானவையென்பதையும்,

(iii) இந்த வாகனங்களை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்தோரின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0544/ ‘10

12.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதியோருக்கான தேசிய செயலகத்தின் மூலம் வழங்கப்படும் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள முதியோர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளும் நிவாரணங்களும் யாவை என்பதையும்,

(ii) மேற்படி அடையாள அட்டையொன்றைக் கொண்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றின் வயோதிபர் ஒருவருக்கு மாதந்தோறும் ஏதேனும் நிதி உதவித் தொகையொன்றை வழங்கும் வேலைத்திட்டமேதும் உண்டா என்பதையும்,

(iii) மகிந்த சிந்தனை கொள்கைகளின் பிரகாரம், மேற்படி அடையாள அட்டைகளை கொண்டுள்ள வயோதிபர் ஒருவருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள், வசதிகள் மற்றும் நிவாரணங்களை செயற்படுத்துவதற்கு ஏதுவாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி சுற்றறிக்கைகளை அமுல்படுத்தும் நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0413/ ‘10

13.

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 எவ், தொகுதியில் அமைந்துள்ள 5079 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 02, வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள, சமர்வில் கம்பனி எனப்படும் கம்பனிக்கு ரூபா 66,027.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல், மேற்படி களஞ்சிய சாலையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) இந்தக் குத்தகை செலுத்தப்படுகையில் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்கா விடின் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0458/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுவரை தொழிற்பாட்டிலுள்ள நிலைதாங்கி பாரந்தூக்கிகளின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) எவ்வளவு காலத்திற்கு முன்பு இவை ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்,

(iii) கடந்து இரண்டு வருடங்களில் இடம்பெற்ற மணித்தியாலம் ஒன்றிற்கான கொள்கலன் நகர்வுகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iv) சிங்கப்பூர், ஹொங்கொங், டுபாய், மலேசியா மற்றும் இந்தியாவிலுள்ள மும்பாய், சென்னை ஆகிய துறைமுகங்களுடன் ஒப்பிடுகையில் இதன் நிலைமை என்னவென்பதையும்,

(v) கடந்த மூன்று வருடங்களுக்கான கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் போக்குவரத்து எவ்வளவு என்பதை வருடாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கொள்கலன்களுக்கான எட்டு நிலைதாங்கி பாரந்தூக்கிகளை கொள்வனவு செய்வதில் கொழும்புத் துறைமுகம் முதலீடு செய்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இதன் மொத்த செலவு என்ன என்பதையும்,

(ii) விலைமனுக்கோரல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பதையும்,

(iii) இல்லையெனில், அதற்கான காரணம் என்னவென்பதையும்,

(iv) வருமானம் எவ்வாறு அதிகரிக்கப்பட்டது என்பதையும்,

(v) ஆரம்பம் முதல் இறுதி கொடுப்பனவு வரையில் முழுக் கருத்திட்டத்திற்கான நிதி ரீதியான செலவு எவ்வளவு என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) தேவையற்றதும் சாதகமற்றதுமான இந்தக் கருத்திட்டத்தில் ஈடுபட்டதற்கான கிடைக்கப்பெற்ற போட்டி விலைகளுடன் ஒப்பிடுகையில் நியாயங்களையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0460/ '10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதுவரையுள்ள சிறைச்சாலை காவல் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த வெற்றிடங்கள் நிலவும் சிறைச்சாலைகள் எவை என்பதையும்,

(iii) அரசாங்கம் அந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கின்றதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அது எந்த அடிப்படையில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிறைச்சாலை காவல் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்காக கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீடு (2011),— 2011 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்தகைய செயற்பாடு களுக்கான செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

> "விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; சமுதாயத்திலுள்ள விலங்குகள்பால் அன்பையும் இரக்கத்தையும், பொறுப்புள்ள நடத்தையையும் வளர்ப்பதற்கும்; தேசிய விலங்கின நலம்பேணல் அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும்; பொதுவாக விலங்கின நலம்பேணலுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

> " ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010, ஒற்றொபர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஒற்றோபர் 06, 2010) [1]

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 7.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 1981, ஏப்பிரல் மாதம்16 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் மகாவலி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2000, மே மாதம் 04 ஆம் திகதிய 1130/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, மார்ச் மாதம் 06 ஆம் திகதிய 1487/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, மார்ச் மாதம் 09 ஆம் திகதிய 1487/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

* 11.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத் தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 14.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 15.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 16.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 17.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 18.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---